**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, RANIPET. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C)
**SPLCC.No.19/2025 - PW-19**

| | |
|---|---|
| Name | திருமதி. விஜயலட்சுமி |
| Husband Name | குமரகுரு |
| Village /Area | வேலூர் |
| Taluk | வேலூர் |
| Occupation | காவல் ஆய்வாளர் |
| Age | 49 |
| Religion | இந்து |
| Aadhar Card No. | |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 05.02.2026.

**2 முதல் 4, 6,7 எதிரிகள் ஆஜர். 5வது எதிரி ஆஜர் இல்லை. பா.நா.சு.சு பிரிவு 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை –**

நான் தற்போது இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு நான் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநகர சிறப்பு புலனாய்வு பிரிவில் பணிபுரிந்து 07.11.2017 தேதி வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் காவல் ஆய்வாளராக அறிக்கை செய்து கொண்டேன். அந்த சமயம் வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து திரு.ரஜினிகாந்த், காவல் ஆய்வாளர் அவர்களால் பதிவு செய்யப்பட்டிருந்த முதல் தகவல் அறிக்கை வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.07/2012 என்ற வழக்கினை நான் புலன் விசாரணைக்கு

எடுத்துக்கொண்டேன். மேற்படி வழக்கின் விசாரணையின் போது, சேகரித்து இருந்த அனைத்து ஆவணங்களையும், விசாரித்த சாட்சிகளை நான் பரிசிலனை செய்தேன். திரு.ரஜினிகாந்த், காவல் ஆய்வாளர் அவர்கள் மேற்படி வழக்கினை விசாரணை செய்து வேளாண் இயந்திரமையமாக்கல் திட்டத்தில் முறைகேடு நடந்ததற்காக தனியாகவும், ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டு திட்டத்தில் முறைகேடு நடந்ததற்காக தனியாகவும் இருவேறு குற்றச்சாட்டுகளுக்காக தனது விசாரணை அறிக்கையை இசைவாணை வேண்டி சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநகரத்திற்கு அனுப்பிருந்தார். இயக்குநகரத்தில் இருந்து மேற்படி இருவேறு குற்றங்களுக்காகவும் இசைவாணை வேண்டி சம்மந்தப்பட்ட உயர் அலுவலர்களுக்கு கடிதம் அனுப்பபட்டுள்ளது. 06.03.2019 அன்று மேற்படி வழக்கின் இசைவாணை வேண்டி அ.சா.1 திரு.முருகேசன் அவர்களை சந்தித்து இந்த வழக்கின் 3ம் எதிரியான திரு.ரூபன் குமார் என்பவருக்கு இசைவாணை வேண்டி வழக்கு தொடர்பானை ஆவணங்களை காண்பித்தேன். அவர் அந்த ஆவணங்களை பரிசிலனை செய்து, வழக்கு சம்மந்தமான விவரங்களை கேட்டு தெரிந்து கொண்டார். 18.03.2019 தேதி அ.சா.16 திரு.ககன்திப்சிங்பேடி IAS அவர்களை சந்தித்து இந்த வழக்கின் 1ம் எதிரியான திரு.இராமலிங்கம், 2ம் எதிரி திரு.சங்கீதராஜ் மற்றும் 4ம் எதிரியான திரு.பாஸ்கரன் ஆகியோர்களுக்கு இசைவாணை வேண்டி வழக்கு தொடர்பான ஆவணங்களை காண்பித்தேன். அவர் அந்த ஆவணங்களை பரிசிலனை செய்து, வழக்கு சம்மந்தமான விவரங்களை

கேட்டு தெரிந்து கொண்டார். 25.09.2020 தேதி அ.சா.16 திரு.ககன்திப்சிங்பேடி IAS அவர்களையும் அ.சா.1 திரு.முருகேசன் அவர்களையும் 19.01.2021 அன்று அ.சா.15 திரு.ஞானசேகரன் IAS அவர்களையும், 23.01.2021 தேதி அ.சா.4 திரு.ஜெயசுந்தர் அவர்களையும் விசாரணை செய்து, தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன்.

மேற்படி விசாரணையில் கடந்த 2007-2008ம் ஆண்டு வேலூர் மாவட்டம், வாலாஜா உட்கோட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டு திட்டத்தில் நடைபெற்ற முறைகேடுகள் சம்மந்தமாக விசாரணை முடிக்கப்பட்டு, வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.07/2012 அ.சா.ஆ.17ல் எதிரிகளாக இருந்த திரு.மணி, திரு.திருமாவளவன், திரு.வஜ்ரம், திரு.சம்பத்ராஜ் ஆகியோர்களின் பெயர்கள் நீக்கப்பட்டு திரு.ராஜேந்திரபிரசாத், நீர்வடி சங்கக்குழு உறுப்பினர், வாலாஜா மற்றும் திரு.பக்தவச்சலம், நீர்வடி சங்கக்குழு உறுப்பினர், வாலாஜா ஆகியோர் எதிரிகளாக சேர்க்கப்பட்டனர். வாலாஜா உட்கோட்டத்தில் ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டு திட்டத்தில் கடந்த 2007-2008ம் ஆண்டில் இவ்வழக்கின் 1 முதல் 7 எதிரிகள் செங்கால் நத்தம், கொண்டபாளையம், ரெண்டாடி, கொண்டகுப்பம், ஜம்புகுளம், தகரகுப்பம் மற்றும் பள்ளேரி ஆகிய கிராமங்களில் எந்த பணிகளையும் மேற்கொள்ளாமல் போலியான பில்களை தயார் செய்து, முட்புதர்களை அகற்றியது போலவும், JCB, Tractor ஆகியவற்றை உபயோகப்படுத்தியது போலவும், செடிகளை நட்டது போலவும், விவசாயிகளுக்கு வழிகாட்டு நெறிமுறைகள் குறித்த பிரசுரங்களை

தயார் செய்து ரூ.10,27,397/– அரசு நிதியை முறைகேடு செய்துள்ளனர். மேற்படி திட்டத்தில் வாலாஜா உட்கோட்டத்தில் எதிரிகள் 1 முதல் 7 வரையானவர்கள் ஒன்றிணைந்து குற்றமுறு சதி திட்டம் தீட்டி ரூ.10,27,397/– அரசு நிதியை கையாடல் செய்ததால் பிரிவு 120(B) of IPCன் கீழும்,

2ம் எதிரியான சங்கீதராஜ், பட்டியல் காசாக்கும் அலுவலர் மற்றும் 3ம் எதிரியான திரு.ரூபன் குமார், சான்றளிப்பு அலுவலர் ஆகியோர் ஒன்றிணைந்து நித்யா ஆப்செட் என்ற கடையின் பெயரில் 7 போலி பில்களை தயார் செய்து அவற்றை DC Bill No. 44/2007–2008 (அ.சா.ஆ.18, 19), DC Bill No. 40/2007–2008 (அ.சா.ஆ.106), DC Bill No. 11/2007–2008 (அ.சா.ஆ.21), DC Bill No. 10/2007–2008 (அ.சா.ஆ.22), DC Bill No. 07/2007–2008 (அ.சா.ஆ.23), DC Bill No. 50/2006–2007 (அ.சா.ஆ.24) ஆகியவற்றில் இணைத்து தெரிந்தே ரூ.3,07,600/– மோசடி செய்து அரசுக்கு இழப்பு ஏற்படுத்தியுள்ளனர்.

எதிரி 1 திரு.ராமலிங்கம், பணம் காசாக்கும் அலுவலர், எதிரி 3 திரு.ரூபன் குமார், சான்றளிப்பு அலுவலர் இருவரும் தெரிந்தே 5ம் எதிரியான திரு.ஜெயசங்கரன் என்பவர் தயார் செய்து கொடுத்த 2 நித்யா ஆப்செட் போலி பில்களை DC Bill No. 55/2007–2008 (அ.சா.ஆ.25), DC Bill No. 75/2007–2008 (அ.சா.ஆ.26) ஆகியவற்றில் இணைத்து தெரிந்தே ரூ.1,60,100/– மோசடி செய்து அரசுக்கு இழப்பு ஏற்படுத்தியுள்ளனர்.

2ம் எதிரியான திரு.சங்கீதராஜ், 3ம் எதிரியான திரு.ரூபன் குமார், சான்றளிப்பு அலுவலர் ஆகிய இருவரும் தெரிந்தே 7ம் எதிரியான திரு.ராஜேந்திரபிரசாத் என்பவர் தயார் செய்து கொடுத்த

திருமகள் அச்சகத்தின் 2 போலி பில்களின் DC Bill No. 16/2007−2008 (அ.சா.ஆ.104), DC Bill No. 17/2007−2008 (அ.சா.ஆ.7) ஆகியவற்றில் இணைத்து தெரிந்தே ரூ.42,000/− மோசடி செய்து அரசுக்கு இழப்பு ஏற்படுத்தியுள்ளனர்.

1ம் எதிரியான திரு.ராமலிங்கம் பணம் காசாக்கும் அலுவலர், 3ம் எதிரியான திரு.ரூபன் குமார், சான்றளிப்பு அலுவலர் ஆகியோர் ஒன்றிணைந்து ஒரு பழனி டிஜிட்டல் ஸ்டுடியோ போலி பில்லை தயார் செய்து DC Bill No. 73/2007−2008 (அ.சா.ஆ.105) ஆகியவற்றில் இணைத்து தெரிந்தே ரூ.35,000/− மோசடி செய்து அரசுக்கு இழப்பு ஏற்படுத்தியுள்ளனர்.

மேற்படி திட்டத்தில் 1ம் எதிரியான திரு.ராமலிங்கம் பணம் காசாக்கும் அலுவலர் என்பவர் தெரிந்தே 7ம் எதிரியான திரு.ராஜேந்திரபிரசாத் என்பவர் தயார் செய்து கொடுத்த வாலாஜா அக்ரோ சர்விஸ் என்ற நிறுவனத்தின் 1 போலி பில்லை DC Bill No. 66/2007−2008 (அ.சா.ஆ.102) ஆகியவற்றில் இணைத்து தெரிந்தே ரூ.42,0000/− மோசடி செய்து அரசுக்கு இழப்பு ஏற்படுத்தியுள்ளனர்.

1ம் எதிரியான திரு.ராமலிங்கம் பணம் காசாக்கும் அலுவலர் மற்றும் 4ம் எதிரியான திரு. பாஸ்கரன், சான்றளிக்கும் அலுவலர் ஆகிய இருவரும் தெரிந்தே 6ம் எதிரியான திரு.பக்தவச்சலம், நீர்வடி சங்க உறுப்பினர் தயார் செய்து கொடுத்த பாஷா ஜெராக்ஸின் 2 போலி பில்களை DC Bill No. 61/2007−2008 (அ.சா.ஆ.2, 3) ஆகியவற்றில் இணைத்து தெரிந்தே ரூ.1,120/− பணமாக்கி மோசடி செய்து அரசுக்கு இழப்பு ஏற்படுத்தியுள்ளனர்.

மேற்படி திட்டத்தில் 2ம் எதிரியான திரு.சங்கீதராஜ், பட்டியல் காசாக்கும் அலுவலர் மற்றும் 3ம் எதிரியான திரு.ரூபன் குமார், சான்றளிப்பு அலுவலர் ஆகிய இருவரும் தெரிந்தே 7ம் எதிரியான திரு.ராஜேந்திரபிரசாத் என்பவர் தயார் செய்து கொடுத்த பாஷா ஜெராக்ஸின் 4 போலி பில்களை DC Bill No. 6/2007-2008 (அ.சா.ஆ.28 முதல் 30 வரை), DC Bill No. 19/2007-2008 (அ.சா.ஆ.31) ஆகியவற்றில் இணைத்து தெரிந்தே ரூ.15,220/- பணமாக்கி மோசடி செய்து அரசுக்கு இழப்பு ஏற்படுத்தியுள்ளனர்.

மேற்படி திட்டத்தில் 2ம் எதிரியான திரு.சங்கீதராஜ், பட்டியல் காசாக்கும் அலுவலர் மற்றும் 3ம் எதிரியான திரு.ரூபன் குமார், சான்றளிப்பு அலுவலர் ஆகிய இருவரும் தெரிந்தே 5ம் எதிரியான திரு.ஜெயசங்கரன் என்பவர் தயார் செய்து கொடுத்த ஷர்மிளா ஸ்டோர்ஸின் 5 போலி பில்களை DC Bill No. 29/2007-2008 (அ.சா.ஆ.32 முதல் 34 வரை), DC Bill No. 33/2007-2008 (அ.சா.ஆ.35), DC Bill No. 34/2007-2008 (அ.சா.ஆ.36) ஆகியவற்றில் இணைத்து தெரிந்தே ரூ.2,707/- பணமாக்கி மோசடி செய்து அரசுக்கு இழப்பு ஏற்படுத்தியுள்ளனர்.

1ம் எதிரியான திரு.ராமலிங்கம் பணம் காசாக்கும் அலுவலர், 4ம் எதிரியான திரு. பாஸ்கரன், சான்றளிக்கும் அலுவலர் ஆகிய இருவரும் தெரிந்த 6ம் எதிரியான திரு.பக்தவச்சலம், நீர்வடி சங்க உறுப்பினர் என்பவர் தயார் செய்து கொடுத்த ஷர்மிளா ஸ்டோர்ஸின் 22 போலி பில்களை DC Bill No. 54/2007-2008 (அ.சா.ஆ.37, 38), DC Bill No. 61/2007-2008 (அ.சா.ஆ.39 முதல் 50 வரை மற்றும் 103), DC Bill

No. 24/2007-2008 (அ.சா.ஆ.51 முதல் 57 வரை) ஆகியவற்றில் இணைத்து தெரிந்தே ரூ.11,583/- பணமாக்கி மோசடி செய்து அரசுக்கு இழப்பு ஏற்படுத்தியுள்ளனர்.

1ம் எதிரியான திரு.ராமலிங்கம் பணம் காசாக்கும் அலுவலர் தெரிந்தே இல்லாத நிறுவனங்களான விக்னேஷ் டிரேடர்ஸின் 7 போலி பில்களை DC Bill No. 67/2007-2008 (அ.சா.ஆ.58 முதல் 64 வரை) இணைத்து ரூ.1,26,450/-ம், பொன்னியம்மன் எர்த் மூவர்ஸின் 7 போலி பில்களை DC Bill No. 67/2007-2008 (அ.சா.ஆ.65 முதல் 71 வரை) இணைத்து ரூ.1,53,636/-ம், சக்தி டிரேடர்ஸின் 7 போலி பில்களை DC Bill No. 67/2007-2008 (அ.சா.ஆ.72 முதல் 78 வரை) இணைத்து ரூ.98,350/- பணமாக்கி மோசடி செய்து அரசுக்கு இழப்பு ஏற்படுத்தியுள்ளனர்.

மேற்படி திட்டத்தில் 2ம் எதிரியான திரு.சங்கீதராஜ், பட்டியல் காசாக்கும் அலுவலர் மற்றும் 3ம் எதிரியான திரு.ரூபன் குமார், சான்றளிப்பு அலுவலர் ஆகிய இருவரும் தெரிந்தே 5ம் எதிரியான திரு.ஜெயசங்கரன் என்பவர் தயார் செய்து கொடுத்த இல்லாத நிறுவனமான அம்மன் ஜெராக்ஸ் என்ற பெயரில் போலியாக தயார் செய்து கொடுத்த 11 போலி பில்களை DC Bill No.29/2007-2008 (அ.சா.ஆ.79 முதல் 89 வரை)ல் இணைத்து தெரிந்தே ரூ.11,622/-யையும் 6 பில்களை DC Bill No. 54/2007-2008 (அ.சா.ஆ.90 முதல் 95 வரை)ல் இணைத்து ரூ.4,859/-யையும் வேல்முருகன் லாரி சர்விஸ் என்ற பெயரில் போலியாக தயார் செய்து கொடுத்த 1 பில்லை DC Bill No. 25/2007-2008 (அ.சா.ஆ.96)ல் இணைத்து ரூ.15,150/-யை பணமாக்கி மோசடி செய்து அரசுக்கு இழப்பு ஏற்படுத்தியுள்ளனர்.

எனவே எதிரி 1 முதல் 7 வரையிலானவர்கள் பொது ஊழியர்களாக இருந்து கொண்டு ஒன்று சேர்ந்து அரசு திட்டத்தில் மோசடி செய்யும் எண்ணத்துடன் கூட்டு சதி செய்து நிறுவனங்களின் பெயரில் போலியான பில்களை தயார் செய்தும், போலியான ஆவணங்களை உருவாக்கியும், பிரிவு 167 இ.த.ச.வின் கீழும், பொது ஊழியர்களாக இருந்து கொண்டு போலியான ஆவணங்களை உருவாக்கியதற்கு பிரிவு 467 இ.த.ச. வின் கீழும், அவ்வாறான போலி ஆவணங்களை உண்மையான ஆவணங்கள் போல் பயன்படுத்தி பணமாக்கி அரசு நிதியினை மோசடி செய்ததற்காக பிரிவு 467 r/w.471 இ.த.ச. வின் கீழும், மேற்படி திட்டதின் கீழ் எந்த பணிகளையும் செய்யாமலேயே செய்தது போல் அரசினை ஏமாற்றும் எண்ணத்துடன் போலியான ஆவணங்களை உருவாக்கியதால் பிரிவு 468 இ.த.ச.வின் கீழும், அந்த ஆவணங்களை உண்மையான ஆவணங்களாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு, செலவினங்கள் செய்தது போல் பயன்படுத்தி அரசிற்கு இழப்பீடு ஏற்படுத்தியதற்காக பிரிவு 468 r/w.471 இ.த.ச. வின் கீழும், பொய்யான கணக்குகள் தயாரித்து பதிவேடுகளில் பதிவுகளை மேற்கொண்டதற்காக பிரிவு 477(A) இ.த.ச.வின் கீழும் அரசை ஏமாற்றி குற்றமுறு நம்பிக்கை மோசடியில் ஈடுபட்டதற்காக பிரிவு 409 இ.த.ச.வின் கீழும் குற்றம் புரிந்துள்ளனர் என்றும், எதிரிகள் பொது ஊழியர்களாக இருந்து கொண்டு அரசு பதவியை துஷ்பிரியோகம் செய்து, முறையற்ற வகையில் ரூ.10,27,397/–யை கையாடல் செய்து அரசிற்கு நிதி இழப்பு செய்ததற்காக பிரிவு 13(2) r/w.13(1)(c) and (d) ஊழல் தடுப்பு சட்டம் 1988 r/w.120(B) of IPC ன் கீழ் 15.04.2021 தேதி

கனம் சிறப்பு நீதிமன்றம், வேலூரில் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில் –**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்பட்டது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness and admitted by him/her to be correct.

M SELVAM Digitally signed by M SELVAM Date: 2026.02.05 17:19:31 +0530

Principal District and Sessions Judge,
Ranipet